தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 85 | 4 Pages | 24.10.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 85 | 4 பக்கங்கள் | 24.10.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

**விளக்கம்:**
(புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.


# தி.மு.க. கூட்டணியில் விவாதம் இருக்கலாம், விரிசல் ஏற்படாது: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, அக். 24

சென்னை அண்ணா அறிவாலய அரங்கில் நடைபெறும் தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கும்மிடி ப் பூண்டி கி.வேணுவின் இல்லத் திரு மண விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கு பெற்று மண மக்களை வாழ்த்தினார். அப்போது பேசிய அவர் கூறியதாவது:


ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் மக்களுக்காக பாடுபடு வதுதான் தி.மு.க.வின் நோக்கம். தி.மு.க. கூட்டணி உடைந்துவி டும் எனக் கூறி எடப்பாடி பழனி சாமி ஜோசியராக மாறிவிட்டார். தன் கட்சியை வளர்க்க முடியாத அவர் அடுத்த கட்சியின் கூட்டணி உடையாதா என காத்திருக்கிறார். தி.மு.க. கூட்டணி வலுவாக இருக்கிறது என்ற விரக்தியிலும், தி.மு.க.வின் செல்வாக்கு உயர்கி றதே என்ற ஆதங்கத்திலும் எடப் பாடி பழனிசாமி பேசி வருகிறார்.

பக்கத்து வீட்டில் என்ன தகராறு



என காத்திருப்பார்களே அதுபோல எடப்பாடி பழனிசாமி காத்துக் கொண்டிருக்கிறார். தி.மு.க. அரசு சிறப்பாக செயல்பட்டு வரு வதால் பொறாமையில் பேசி வருகிறார். தி.மு.க. கூட்டணியில் விவாதங்கள் இருக்கலாம்; ஆனால் விரிசல் ஏற்படாது. எங்கள் கூட்டணி பத விக்காக அமைக்கப்பட்ட கூட் டணி இல்லை; கொள்கைக்காக அமைக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## உக்ரைன் விவகாரத்தில் தீர்வு காண இந்தியா முழு ஒத்துழைப்பு அளிக்கும்: பிரதமர் மோடி



மாஸ்கோ, அக். 24

பிரிக்ஸ் அமைப்பின் 16வது உச்சி மாநாடு ரஷியாவின் கசான் நகரத்தில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது. இந்த மாநாட்டின் கருப்பொருள் 'உலகளாவிய வளா்ச்சி மற்றும் பாதுகாப்புக்கான பலதரப்பு வாதத்தை வலுப்படுத்துதல்' ஆகும்.

இந்த மாநாட்டில் பிரதமா் மோடி, சீன அதிபா் ஜி ஜின்பிங், ஈரான் அதிபா் மசூத் ரஜாவி உள்பட உறுப்பு நாடுகளின் தலைவா்கள் பங்கேற் கின்றனா். சா்வதேச அரசியல், பிரிக்ஸ் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு மற் றும் மேம்பாடு, பரஸ்பர பிரச்சனைகள் குறித்து தலைவா்கள் கலந்துரை யாட உள்ளனா்.

இதற்கிடையே, டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் ரஷியாவின் கசானுக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் மந்திரிகளும், உயர் அதிகாரிகளும் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதையடுத்து, ரஷிய அதிபர் விளாடிமிர் புதினை சந்தித்து பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில், ரஷிய அதிபருடனான சந்திப்பின்போது பிரதமர் மோடி பேசியதாவது:

உக்ரைன்ரஷியா மோதல் விவகாரத்திற்கு அமைதியான முறையில் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்தியா அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங் கும். மனிதநேயத்திற்கு முன்னுரிமை அளித்தே நமது அனைத்து முயற்சி களும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக உக்ரைன் மற்றும் ரஷியாவுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. கடந்த 3 மாதங்களில் தனது 2வது ரஷிய பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் ஆழமான நம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது என தெரி வித்தார்.

# தமிழ்நாடு மாநில தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அனைத்து பணியாளர் சங்கம் மூன்றாம் நாள் தொடர் வேலை நிறுத்த போராட்டம்

செஞ்சி,அக் 24

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி காஞ்சி பஜார் செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி எதி ரில் விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் மூன்றாம் நாள் காலவரை யற்ற வேலை நிறுத்த போராட்டம் மாவட்டத் இணைசெயளார் ஞானசேகரந்த லைமையில்சி றப்புரை ஏழுமலை நடைபெற்றது இதில் 3அம்ச கோரிக்கைகள் நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர் இதில் விற்பனையாளரின் அபராத தொகையை இரு மடங்கு வசூல்



ெய்வது ரத்து செய்ய வேண்டும் என வும் நியாயவிலை கடைகளில் கட் டுப்பாடற்ற பொருட்கள் அதிகமாக இறக்கி விற்பனை செய்ய குறியீடு கைவிட வேண்டும் எனவும் விற்ப னையாளர்கள் சொந்த மாவட்டத்தி லும் ஒன்றித்திலும் மாற்றி தர ஆணை வழங்கிட வேண்டும் என வும் என மூன்று அம்ச கோரிக்கை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்நிகழ்வில்வி ழுப்புரம்மா வட்ட .டாக்பியா நிர்வாகிகள் மாவட்ட செயலாளர் அனந்த சைனன் சக்திதாசன் மாவட்ட இணை செயலாளர் மற்றும் தொடக்க வேளாண்ம

# பாதிக்கப்பட்டோர் கழகம் மற்றும் பத்து ரூபாய் இயக்கம் இணைந்து நடத்தும் சட்ட விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம்



விழுப்புரம், அக். 24

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள மேல்மலையனூரில் பாதிக்கப்பட்டோர் கழகம் மற்றும் பத்து ரூபாய் இயக்கம் இணைந்து சட்ட விழிப்புணர்வு பிரச்சாரக் கூட் டம் செல்வகுமார், தலைமையில் நடைபெற்றது இதில்சிறப்பு பயிற்சியாளராக நந்தகோபால் சந்தி ரசேகர்,பெரியசாமிகலந்துகொண்டு பொதுமக்களுக்கு சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தினர்இ நந்நி கழ்வில் கணேசன், ஆரியசாமி, கோகுல்காந்தி, மன்னார்,புண்ணிய மூர்த்தி, தண்ட பாணி சமூக ஆர் வலர்கள் கிராம பொதுமக்கள் என ஏராளமான கலந்து சிறப்பித்தனர்.

# மதுரையில் 3 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை




மதுரை, அக். 24

சுதந்திர போராட்ட வீரர்களான மாமன்னர்கள் மருதுபாண்டியர்க ளின் குருபூஜை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இன்று(வியாழக் கிழமை) நடைபெறுகிறது. அதனை தொடர்ந்து ராம நாதபுரம் மாவட்டம் கமுதி அடுத் துள்ள பசும்பொன்னில் முத்து ராம லிஙகத் தேவரின் ஜெயந்தி விழா, குருபூஜை வருகிற 30ந்தேதி நடை பெறுகிறது. இந்த விழாக்களில் தமி ழக அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, அரசியல் கட்சி தலைவர்கள், சமு தாய அமைப்பினர், பொதுமக்கள் என சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற் பட்டோர் கலந்து கொள்ள உள்ள தால், பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் செய்து வருகின்ற னர். இந்த நிலையில், மருதுபாண்டி யர் நினைவு தினம் மற்றும் தேவர் ஜெயந்தி விழாயை முன்னிட்டு மது ரையில் வருகிற 27, 28, 29 ஆகிய 3 நாட்களுக்கு மதுக்கடைகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட நிர்வா கம் உத்தரவிட்டுள்ளது. மேலும் மனமகிழ் மன்றங்கள், தனியார் பார் உள்ளிட்டவை 3 நாட்கள் மூடப் பட்டு இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இந்தியா சீனா இடையே புதிய ஒப்பந்தம்.. முடிவுக்கு வரும் எல்லைப் பிரச்சனை? பின்னணி



லடாக், அக். 24

லடாக் எல்லையில் ரோந்து செல்வது தொடர்பாக இந்தியா சீனா இடையே புதிய ஒப்பந்தமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா சீனா இடையே பல காலமாக எல்லைப் பிரச்சனை இருந்துவருகிறது. இதனால் எல்லைகளைத் துல்லியமாக வரையறை செய்யமுடியாமல் இருக்கிறது.

அதற்குப் பதிலாக எல்.ஏ.சி. எனப்படும் எல்லை கட்டுப்பாடு கோடு நிர்ணயிக்கப்பட்டு அவரவர் பகுதியில் இரு நாட்டு ராணுவமும் ரோந்து செல்கின்றன. அவ்வப்போது இந்தியப் பகுதிகளுக்குச் சீனா பெயர் வைப்பதும், தங்களது எல்லையில் குடியேற்றங்களை நிறுவுவதுமாகச் சீனா இருக்கிறது.

முன்னதாக கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கிழக்கு லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் வைத்து இந்திய ரோந்து படை மீது சீன ராணுவம் திடீர் தாக்குதல் நடத்தியதால் நிலைமை இன்னும் மோச மாகத் தொடங்கியது. இந்த தாக்குதலில் 20 இந்திய வீரர்கள் உயிரிழந் தனர்.

ஊடுருவிய நிலப்பகுதிகளிலிருந்து சீன ராணுவம் பின்வாங்க மறுத்து எல்.ஏ.சி. எல்லையை ஒட்டி கட்டுமானங்களை மேற்கொண்டு வருகி றது. இந்நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக இந்த பிரச்சனையைத் தீர்க்க இருதரப்பு பேச்சுவார்த்தை நடந்துவந்த நிலையில் தற்போது புதிய ஒப் பந்தமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 2020 ஜூன் மாதத்துக்கு முன் இருந்த உடன்பாட்டின்படி இரு நாட்டு ராணுவமும் ரோந்து செல்ல உடன்பாடு ஏற்பட்டுஉள்ளது. எனவே எல்லையில் இருந்து இரு நாட்டு படைகளும் முன்பிருந்த முகாம்களின் தூரத்துக்கு பின்னோக்கி செல்வது முக்கிய மைல் கல் லாக பார்க்கப்படுகிறது.

# காதலன் பேசாமல் இருந்ததால் பிளேடால் அறுத்துக்கொண்ட மாணவி: மர்ம நபர்கள் அறுத்ததாக நாடகம்

சென்னை, அக். 24

சென்னையில் மர்ம நபர்கள் பிளே டால் அறுத்ததாக கல்லூரி மாணவி அளித்த புகாரில், திடீர் திருப்பமாக காதலன் பேசாமல் இருந்ததால், மாணவியே தன்னைத் தானே அறுத் துக்கொண்டு, நாடகமாடியது அம்ப லமாகியுள்ளது.

சென்னை ராமாபுரத்தில் உள்ள தனியார் கல்லூரியில், கோடம்பாக் கத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி பி.டெக். படித்து வருகிறார்.

இவர், கல்லூரி அருகே நின்று கொண்டிருந்த போது, முகமூடி அணிந்த மர்ம நபர்கள் பிளேடால் கிழித்ததாக அலறியுள்ளார்.

அருகில் இருந்தவர்கள் மாண வியை மருத்துவமனைக்கு அழைத் துச் சென்று சிகிச்சை அளித்து வீட் டிற்கு அனுப்பியுள்ளனர்.

இதுகுறித்து மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்ப டையில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது அவர் முன்னுக்குப் பின் முரணாக பேசி யுள்ளார். தொடர்ந்து அங்கிருந்த சிசி டிவி காட்சிகளை ஆய்வு செய்த போது, அதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்பது தெரிய வந்தது.

இதையடுத்து போலீசார், மாணவி யிடம் கிடுக்குப்பிடி விசாரணை நடத்தினர். அப்போது மாணவி இளைஞர் ஒருவரை காதலித்து வந் ததும், அவர் கடந்த சில நாட்களாக பேசாமல் இருந்ததால், அவரை பேச வைப்பதற்காக தன்னைத் தானே பிளேடால் கிழித்துக்கொண்டு நாடகமாடிய தும் அம்பலமானது.

## 'டானா' புயலின் நகரும் வேகம் குறைந்தது

சென்னை, அக். 24

மத்திய கிழக்கு வங்கக் கடலில் உரு வான காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இந்த நிலையில் இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக உருவாகியுள்ளது . இந்த புயலுக்கு 'டானா' புயல் என பெயரிடப்பட்டுள்ளது. 'டானா' புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை ஒடிசாவின் புரி பகுதிக்கும் சாகர் தீவுக ளுக்கும் இடையே கரையைக் கடக் கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் மணிக்கு 110 முதல் 120 கி.மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள 'டானா' புயல் 15 கி.மீ. வேகத்தில் நகர்ந்த நிலையில், தற்போது அதன் வேகம் சற்று குறைந் துள்ளது. கடந்த 6 மணி நேரத்தில், மணிக்கு 13 கி.மீ வேகத்தில் நகர்ந்து செல்கிறது. புயல் வடக்கு நோக்கி நகர்வதால், தமிழகத்துக்கு பெரிய மழை ஆபத்து இல்லை என்று கூறப்ப டுகிறது.

# ரூ.7.40 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கட்டட கட்டுமான பணிகள்: மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, அக். 24

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகள், மாவட்ட சுற்றுசூழல் பொறியியல் அலுவலக கட்டிடம் கட்டுமான பணிகளை மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் பொதுப்பணித்துறை கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு துறை சார்பில் பள்ளி கல்வித்துறையின் கீழ் செயல்படும் நாகர் கோவில் எஸ்.எல்.பி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.3.19 கோடி மதிப்பில் 12 வகுப்பறைகள், 1ஆய்வகம், இருபாலர்களுக்கான தனித்தனி கழிவறைகள், குடிநீர் வசதிகள் ஆகியவற்றுடன் கூடிய புதிய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கட்டுமான பணிகள் தரமானதாகவும், உறுதித்தன்மையுடனும் கட்டப்பட்டு விரைவில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து நாகர்கோவில் கோட்டார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ரூ.85.44 இலட்சம் மதிப்பில் 4 புதிய வகுப்பறைகள் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொளப்பட்டதோடு, கான்கீரிட் மேல்தளம் உறுதித்தன்மை உள்ளிட்டவைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் கட்டுமான பணிகளை விரைந்து முடித்திட துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வழுக்கம்பாறையில் ரூ.3.33 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியியல் அலுவலக கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் கட்டுமான பணிகளில் உள்ள குறைகளை விரைந்து முடித்திடவும், அலுவலக வளாகத்தினை சுத்தம் செய்து வாகன நிறுத்தும் வசதி அமைத்து, சீரமைத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர். அழகுமீனா தெரிவித்தார்கள்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழு தலைவர் தலைமையில் அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்



கரூர், அக். 24

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழு அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அரசு உறுதிமொழிக்குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையில், மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் மற்றும் அரசு உறுதிமொழிக்குழு உறுப்பினர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ்(சோழிங்கநல்லூர்), இரா. அருள் (சேலம் மேற்கு), ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் (விருதுநகர்), மு. பூமிநாதன்(மதுரை தெற்கு), சா.மாங்குடி (காரைக்குடி), எம்.கே. மோகன்(அண்ணா நகர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுதிமொழி குழு தலைவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதி மொழிக் குழு கரூர் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள அரசு உறுதி மொழிகள் மீது தொடர்புடைய துறைகளின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இன்றைய தினம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழு 2 நாள் பயணமாக புதுக்கோட்டை மற்றும் கரூர் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புகளூர் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் மேம்பாட்டு பணிகளையும், நஞ்சை புகளூரில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.406 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கதவனையையும், சுக்காளியூர் ஆவின் நிறுவனத்தில் புதிதாக விரிவாக்கம் செய்யபட்டுள்ள பால் பண்ணையையும், அதனைத்தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு ரூ. 1.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்ட்டு வரும் புதிய அலுவலக கட்டுமானப்பணிகளையும், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வெளி மற்றும் உள் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கரூர் பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகளின் சுகாதாரம் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டு கழிவறைகளை சுகாதாரமாக வைத்துக்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையத்தல் உள்ள கடைகளில் விற்கப்படும் உணவுப்பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அரசு உறுதிமொழிக்குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா. பெரோஸ்கான் அப்துல்லா, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் ம.கண்ணன், கு.விமல்ராஜ் (நிலமெடுப்பு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மகளிர் திட்ட இயக்குநர் பாபு, மாவட்ட ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) யுரோகா, சட்ட மன்றப் பேரவை துணைச்செயலாளர் திரு. ஸ்ரீரா.ரவி மற்றும் சார்புச் செயலாளர் த. பியூலஜா உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேனியில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 3-வது நாளாக வேலை நிறுத்த போராட்டம்




ஆண்டிபட்டி, அக்.24

தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது .ஏற்கனவே இந்த அமைப்பை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கடந்த மூன்று நாட்களாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அரசுக்கு தங்கள் கோரிக்கை வலியுறுத்தும் வகையில், ஆலோசனைக் கூட்டம், ஆண்டிபட்டி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் அருணகிரி தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் காமராஜ் பாண்டியன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் அரசுக்கு மூன்று முக்கிய கோரிக்கை வைக்கப்பட்டது. ரேஷன் கடைகளில் மளிகை பொருட்களான டீ தூள் ,மல்லித்தூள் உள்ளிட்ட சில தரம் இல்லாத பொருட்களை அனுப்பி வருகிறார்கள். காலாவதியான பொருட்களும் சில நேரம் வந்து சேர்கிறது .இதனால் பாதிக்கப்படுவது அந்த ரேஷன் கடையில் உள்ள சேல்ஸ்மேன்கள் மட்டும் தான். எனவே தரமான பொருள்கள் நிறுவனங்கள் வழங்க வேண்டும் என்றும், காலாவதியான பொருட்களை நிறுவனமே மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், கடைகளில் பல்வேறு சூழ்நிலையில் ஆய்வுக்கு வரும்போது முன்பு பற்றாக்குறை ஏற்பட்டால் அரிசி கிலோ 1 க்கு 25 ரூபாய் அபதாரமும் ,துவரம் பருப்புக்கு 75 ரூபாய் அபதாரமும் விதிக்கப்பட்டு வந்தது, தற்போது அதனை அரிசிக்கு 45 ரூபாயாக அதிகரித்தும், துவரம்பருப்பு உள்ளிட்ட பொருட்களுக்கு 110 ரூபாய் என்று அதிகரித்தும் அபதாரம் விதித்து வருகிறார்கள். எனவே இதனால் ரேஷன் கடைக்காரர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே ஏற்கனவே உள்ள நிர்ணயிக்கப்பட்ட தொகை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என்றும், தற்போது ரேஷன் கடைகளில் காலி இடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வந்துள்ளது. இந்நிலையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட சேல்ஸ்மேன்களை அருகாமையில் உள்ள கடைகளில் நிரப்பிய பின்பு, புதிய ஆட்களை தேர்வு செய்ய வேண்டும் ,உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடைபெறுவதாகவும், அரசின் கவனத்திற்கு இதனை கொண்டு செல்லவே இந்த போராட்டம் நடைபெறுவதாகவும் இந்த அமைப்பின் நிர்வாகிகள் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை தலைவர்கள் காளிப்பாண்டியன், செல்லாண்டி மற்றும் இணைச் செயலாளர்கள் சரவணன், பாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

# திமுக கழக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் இல்லத் திருமண நிகழ்ச்சி: எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி அக், 24

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கெலமங்கலம் பீ.டி.ஓ.ஆஃபீஸ் நேதாஜி நகரில் உள்ள திமுக கழக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் விஜயஸ்ரீ ஸ்ரீனிவாசன் அவர்களின் புதல்வன் எஸ்.விக்னேஷ் யாதவ்,பிருந்தா இவர்கள் திருமணத்திற்கு திமுக கழக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய் பிரகாஷ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் டி,மதியழகன் இவர்கள் இந்த திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்,

இந்த திருமண நிகழ்ச்சியில் ஓசூர் மாநகர மேயர் எஸ்.ஏ. சத்யா,துணை மேயர் சி. ஆனந்தய்யா,கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஒன்றிய செயலாளர்கள் கெலமங்கலம் கிழக்கு சின்ராஜ், மேற்கு ஸ்ரீதர், அஞ்செட்டி ஒன்றிய செயலாளர் ராஜா, மாவட்ட பிரதிநிதி அலெக்ஸ்,மற்றும் சில ஒன்றிய செயலாளர்கள் தேன்கனிக்கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் நகர செயலாளர் டி.ஆர். சீனிவாசன்,கெலமங்கலம் நகர செயலாளர் கே.தஸ்தகீர், மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய மாநகர நகர நிர்வாகிகள், பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகள் பிரபல தொழிலதிபர்கள் என பலர் இந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

சார் இந்த இரண்டு படம் நாளிதழில் வையுங்கள் சார் இரண்டு படம் கிருஷ்ணகிரி மேற்கு கிழக்கு இரண்டு மாவட்ட செயலாளர்கள் உள்ளனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரியில் பி.எட்., மற்றும் எம்.எட்., துவக்கவிழா



புதுக்கோட்டை, அக். 24

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரியில் பி.எட் மற்றும் எம்.எட் துவக்கவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.; குத்துவிளக்கேற்றி விழா இனிதே ஆரம்பமானது. கல்லூரியின் முதல்வர் முனைவர் எம். இளங்கோவன் அனைவரையும் வரவேற்றார். வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனங்களின் செயலாளர் பி.கருப்பையா தலைமையுரையாற்றினார். திருச்சி தேசியக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் சா.நீலகண்டன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில் மாணவராக இருந்து மகத்துவராக வெளியே செல்லவேண்டும். படிப்பு என்பது அடிப்படையான மூச்சு காற்றாகும். ஒருவருடைய தலையெழுத்து கல்வியால் மாறும் ஆசிரியரை பின்பற்றினால் வாழ்க்கையில் கரைசேரலாம் என்று பல கருத்துக்களை எடுத்துக் கூறி உரையாற்றினார். வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனங்களின் பொருளாளர் கவிஞர் ஆர்.எம்.வீ.கதிரேசன், அறங்காவலர் கே.ராஜா, வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர்; ஜீவானந்தம், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், துணைத்தலைவர் வி.ஜோயல்கனகராஜ், செயலாளர், ஜெ.ஜெபின், பொருளாளர் கே. அய்யாச்சாமி வாழ்த்துரை வழங்கினர். ,கல்லூரியின் உதவிப் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். உதவிப்பேராசிரியர் எம்.திருவள்ளுவன் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# கே.எஸ்.ஆர் பல் மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 20ம் ஆண்டு நிறைவு விழா



நாமக்கல் அக் 24

தமிழகத்தில் பல் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் போற்றத்தக்க வகையில் கே.எஸ்.ஆர் பல் மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இக்கல்லூரி தொடங்கி 20 ஆண்டுகள் நிறைவுற்றதை கொண்டாடும் விதமாக 20ம் ஆண்டு நிறைவு விழா 19.10.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய பல் மருத்துவ கழகத்தின் நிர்வாக குழு உறுப்பினர் பேராசிரியர் டாக்டர் ராகுல் ஹெக்டெ அவர்களும், கௌரவ விருந்தினராக முன்னாள் முதல்வர் டாக்டர்குமார், பங்கேற்றனர்.

இவ்விழாவிற்கு கல்லூரியின் தாளாளர் ஆர். சீனிவாசன் தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் டாக்டர் சரத் அசோகன், துணை முதல்வர் டாக்டர் சுமன், இயக்குநர்கள் டாக்டர் ஹெச்.பிரசாத், டாக்டர் பி. ஆர். கீதபிரியா, கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர்.வி.மோகன் மற்றும் முதல்வர்கள் கலந்து கொண்டனர். இவ்விழா சிறக்கும் விதமாக கல்லூரியில் அதிநவீன தொழில் நுட்பமுடைய டிஜிட்டல் வாய் உள் வழிஸ்கேனர், சிறப்பு விருந்தினர் டாக்டர் ராகுல் ஹெக்டெ, அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கல்லூரியின் முதல்வர் டாக்டர் சரத் அசோகன் அவர்கள் கல்லூரியின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். இது கல்வியாண்டில் கல்லூரியின் முக்கிய முயற்சிகள், ஆசரியர் மற்றும் மாணவர்களின் சாதனைகளை விவரிக்கிறது. பல் மருத்துவக் கல்லூரியில் 20 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை கல்லூரியின் தாளாளர் ஆர் சீனிவாசன் சிறப்பித்தார்.

மாணவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் சிறந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. இவ்விழாவில் 2022-2023 ஆம் ஆண்டுக்கான பல் கலைகழகத் தேர்வுகளில் பல்வேறு பாடங்களில் முதலிடம் பெற்ற மாணவ மாணவியர்களை சிறப்பு விருந்தினர் டாக்டர் ராகுல் ஹெக்டெ விருதுகள் வழங்கி பாராட்டினார். இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# தாராபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் கூட்டுறவு கடன் சங்கம், கூட்டுறவு மருந்தகம் திறப்பு: அமைச்சர்கள் பங்கேற்பு



தாராபுரம், அக். 24

தாராபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், கூட்டுறவு மருந்தகத்தையும், கூட்டுறவு கடன் சங்க கட்டிடத்தையும் அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பொன்னாபுரம் ஊராட்சியில், புதிதாக கட்டப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க புதிய கட்டிடத்தையும் சின்னப்புத்தூரில் புதியதாக கட்டப்பட்ட கூட்டுறவு மருந்தகத்தையும் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சிக்கு தாராபுரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.வி. செந்தில்குமார் துணைத்தலைவர் சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, திமுக ஊராட்சி ஒன்றிய நிர்வாகி நாட்டுத்துரை உட்பட பல திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பயனாளிகளுக்கு பல்வேறு கடன்களுக்கான ஆணைகளை அமைச்சர்கள் வழங்கினர்.

# குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிக்க அனுமதி

தென்காசி:, அக்.24

குற்றாலத்தில் வெள்ளப் பெருக்கு குறைந்ததையடுத்து அனைத்து அருவிகளிலும் இன்று சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். குற்றாலத்தில் நேற்று பகலில் மேற்கு தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனைத் தொடர்ந்து மாலையில் அருவிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தண்ணீர் கலங்கலாக விழுந்ததால் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி ஆகிய மூன்று பிரதான அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்கதடைவிதிக்கப்பட்டது. இந்நிலையில் இன்று காலை வெள்ளப்பெருக்கு கட்டுக்குள் வந்ததையடுத்து அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். தடை விலக்கிக் கொள்ளப்பட்டதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

# மேலூர், கொட்டாம்பட்டி கூட்டுறவு வங்கி சங்க பணியாளர்கள் வேலை நிறுத்தம்: ரேஷன் பொருட்கள் விநியோகம் பாதிப்பு

மேலூர் அக்.24

தமிழ்நாடு தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் மதுரை மாவட்டம் மேலூர் கிளையின் சார்பில் வேலை நிறுத்தம் நடந்தது.



இதில் பணியாளர்கள், ரேஷன் கடை விற்பனையாளர்கள் மீது விதிக்கப்படும் அபராதத்தை பல மடங்கு உயர்த்தியதை கண்டித்து அந்த அரசு ஆணையை திரும்ப பெற வலியுறுத்தியும் மிகக் குறைந்த சம்பளமே பெரும் விற்பனையாளர்களை அருகில் உள்ள ரேஷன் கடைகளில் பணியமர்த்த வேண்டும், அரசு அறிவிப்புக்கு முரணாக தேவையற்ற கட்டுப்பாடுகள் விதித்து பொருட்களை வினியோகம் செய்ய நிர்பந்திக்க கூடாது என்ற 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அதன் மாவட்ட தலைவர் எஸ். கணேசன் தலைமையில், ஒன்றிய தலைவர் சரவணன் ஒன்றிய பொருளாளர் கருப்பு மற்றும் 18 சங்கங்களை சேர்ந்த 80 பணியாளர்கள் கடந்த 21ஆம் தேதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொடர்ந்து மூன்று நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இவர்கள் தொடக்க கூட்டுறவு வங்கி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கடந்த மூன்று தினங்களாக தொடக்க கூட்டுறவு சங்கம் வங்கி செயல்படவில்லை. இதன் மூலம் பயிர் கடன், நகை கடன், உரம் விநியோகம் மற்றும் ரேஷன் பொருட்கள் தடைபட்டுள்ளது.

அதே போல் கொட்டாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். கொட்டாம்பட்டி பகுதியில் 13 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளது. இந்த சங்கங்களில் 77 பேர் பணியாற்றி வருகின்றனர். இதில் செயலாளர்கள், விற்பனையாளர்கள், மற்றும் அனைத்து பணியாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

உடன் கொட்டாம்பட்டி ஒன்றிய செயலாளர் சோமசுந்தரம், தலைவர் ரவி, பொருளாளர் அருவுகம், துணை தலைவர்கள் சுகுமார், சசிகலா, இணைச் செயலாளர் சரவணன், பாண்டி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கௌரவ செயலாளர் ஆ.ம. ஆசிரிய தேவன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

# ஐ.டி.ஐ. மாணவர் சேர்க்கை அக்.30 வரை நீட்டிப்பு

சென்னை, அக். 24

தொழில் பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் நேரடி சேர்க்கை அக்.30 வரை நீட்டிக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. 202425ம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கான இறுதிநாள் செப்.30 வரை இருந்த நிலையில் அக்.30 வரை நீட்டிக்கப்படுகிறது. அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு பயிற்சி கட்டணம் இல்லை. மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாதம் ரூ.750 மற்றும் மிதிவண்டி, சீருடை, பயிற்சிக் கருவிகள் வழங்கப்படும்.

# தமிழகத்தில் 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, அக். 24

தமிழ்நாடு காவல்துறையில் 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, சி.பி.சி.ஐ.டி. சிறப்பு விசாரணைப் பிரிவின் ஐ.ஜியாக அனிசா ஹுசைன் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில காவல் கட்டுப்பாட்டு அறையின் எஸ்.பி.யாக சர்வேஷ் ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம் நடந்தது எப்படி? விரிவான விசாரணை நடத்த ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, அக். 24

4 பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம் நடந்தது எப்படி? என்பது தொடர்பாக விரிவான விசாரணை நடத்த ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.



கிருஷ்ணகிரியில் உள்ள 4 தனியார் பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம் நடத்தி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளிக்கப்பட்டது தொடர்பான வழக்கின் விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் எனக் கோரி வழக்கறிஞர் சூரிய பிரகாசம் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதத்தில், "4 பள்ளிகளில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த 3 வழக்குகளிலும் இடைக்கால குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு பள்ளிக்கு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ள நிலையில், மற்ற 3 பள்ளிகளுக்கும் சிறப்பு அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ஒரு கோடியே 63 லட்சம் ரூபாய் கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் சிறப்பு நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், குற்றம் சாட்டப்பட்ட சிவராமன், பள்ளி மாணவிகளுக்கு அவரது அலுவலகத்தில் வைத்து பாலியல் தொல்லை அளித்ததாகவும், மாமல்லபுரம், கொடைக்கானல் உள்ளிட்ட இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதோடு, சம்பவம் நடைபெற்றது முதல் தற்போது வரையிலான விசாரணை நிலை குறித்த அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படும் எனவும், நீதிமன்றம் திருப்தி அடையக்கூடிய வகையில் விசாரணை நடைபெறும் எனவும் அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

அதே சமயம் நீதிபதிகள், இந்த வழக்கை பொறுத்த வரை நீதிமன்றம் திருப்தி அடையக்கூடிய வகையில் இதுவரை விசாரணை நடத்தப்படவில்லை என்று குறிப்பிட்டனர். இதையடுத்து, 4 பள்ளிகளில் போலி என்.சி.சி. முகாம் நடத்தப்பட்டது எப்படி? என்பது தொடர்பாக விரிவான விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை வரும் 30ந்தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

# த.வெ.க.வில் தற்காலிக தொகுதி பொறுப்பு வழக்கறிஞர்கள் நியமனம்

சென்னை, அக். 24

தமிழ்க வெற்றிக் கழக பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நமது தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யின் ஆணைக்கிணங்க வரும் 27ம் தேதி விழுப்புரம் மாவட்டம். விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் நடைபெற உள்ள வெற்றிக் கொள்கைத் திருவிழாவிற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, மாநாட்டுப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நமது கழகத்தின் சார்பில், கழகத் தலைவரின் ஒப்புதலோடு மாநாட்டில் பங்கேற்கும் கழகத் தோழர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் சட்ட ரீதியில் உதவிடும் வகையில் தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மாநாட்டிற்கான தற்காலிகத் தொகுதிப் பொறுப்பு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தற்காலிகத் தொகுதிப் பொறுப்பு வழக்கறிஞர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதிகளிலும், அதனை ஒட்டியுள்ள சட்டமன்றத் தொகுதிகளிலும், மாநாட்டிற்கு வரும் கழகத் தோழர்களுக்குத் தேவைடான வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டரீதியிலான உதவிகளை மேற்கொள்வார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சார்பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை

சென்னை, அக்.24

தமிழகம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களில் பத்திரப்பதிவு, வில்லங்க சான்றிதழ் பெறுதல், திருமணப் பதிவு உள்ளிட்ட பதிவு சார்ந்த பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், சில சார்பதிவாளர் அலுவலகங்களில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும், அலுவலர்கள் லஞ்சம் பெறுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.




இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்பு துறைக்கு பல்வேறு புகார்கள் வந்தன.

இந்த நிலையில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். அவிநாசி, அச்சிறுப்பாக்கம், திருப்போரூர், மரக்காணம், திருச்செங்கோடு, அரக்கோணம், தேனி ஆகிய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இந்த சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக கூறப்படுகிறது. எனினும், சோதனை முழுமையாக முடிவடைந்த பிறகே, கைப்பற்றப்பட்ட பணம், ஆவணங்கள் குறித்த விவரம் தெரியவரும் என லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

# புதுப்பெண் தற்கொலை: கைதுக்கு பயந்து மாமியார் விஷம் குடித்து தற்கொலை முயற்சி

குமரி, அக்.24

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தெற்குமண் பகுதியை சேர்ந்தவர் கார்த்திக். இவர் மின்வாரியத்தில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கும் கோவை மாவட்டம் பெரியநாயக்கன் பாளையத்தை சேர்ந்த பாபு என்பவரது மகள் சுருதி பாபு என்பவருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணமானது.



திருமணத்திற்கு பிறகு சுருதி பாபு கணவர் வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் சுருதி பாபு நேற்று முன்தினம் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து சுசீந்திரம் போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுதொடர்பாக கணவர் கார்த்திக், மாமியார் செண்பகவல்லி மற்றும் சுருதி பாபுவின் உறவினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும் தனது மாமியாரின் கொடுமையால் தான் நான் தற்கொலை செய்துகொண்டேன் என சுருதி பாபு (புதுப்பெண்) வாட்ஸ்அப்பில் ஆடியோ ஒன்றை தனது தாயாருக்கு அனுப்பியுள்ளார். அந்த ஆடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இந்த நிலையில், புதுப்பெண் தற்கொலை செய்து கொண்ட விவகாரத்தில், கைதுக்கு பயந்து மாமியார் செண்பகவல்லி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். அவரை அவரது உறவினர்கள் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில், செண்பகவல்லி சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து சுசீந்திரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கவர்னரின் நிகழ்ச்சியை தவிர்ப்பது ஏன்? அமைச்சர் கோவி.செழியன் விளக்கம்




மதுரை, அக். 24

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் 56வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு 54,714 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். இந்த பட்டமளிப்பு விழாவை தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் புறக்கணித்தார்.

பல்கலைக்கழகங்களின் இணை வேந்தரான உயர் கல்வித்துறை அமைச்சர் இல்லாமல் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து 3வது முறையாக பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில், கவர்னர் பங்கேற்கும் நிகழ்ச்சியை புறக்கணிப்பது ஏன்? என்பது தொடர்பாக அமைச்சர் கோவி.செழியன் விளக்கமளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

"கவர்னருடன் மோதல் போக்கை உற்சாகப்படுத்தி, மாநில வளர்ச்சிக்கு தடையாக இருப்பவர்கள் நாங்கள் அல்ல. கவர்னருடனான தொடர்பு என்பது தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் கவர்னருடன் சில விழாக்களில் கலந்து கொண்டோம்.

ஆனால் தற்போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் கவர்னர் ஆர்.என்.ரவியின் செயலும், பேச்சும் தமிழர்களின் மனம் புண்படும்படி இருந்து வரும் காரணத்தால், அவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்து புறக்கணித்திருக்கிறேன்."

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

# ஆன்லைனில் வாங்கிய கடனை செலுத்த முடியாததால் இளைஞர் தற்கொலை

சென்னை, அக். 24

செங்கல்பட்டு அடுத்த அனுமந்த புத்தேரி பகுதியை சேர்ந்தவர் யுவராஜ் (27). இவருக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சுபாஷினி என்ற பெண்ணுடன் திருமணம் நடைபெற்றது. இவருக்கு 6 மாத கைக்குழந்தை உள்ளது. இந்த நிலையில் யுவராஜ் செங்கல்பட்டு பகுதியில் உள்ள இருசக்கர வாகன சர்வீஸ் சென்டரில் பணிபுரிந்து வந்தார். கடந்த ஒரு மாதமாக வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்ததாக கூறப்படுகிறது.

அப்போது பண தேவைக்காக ஆன்லைன் செயலி மூலம் கடன் பெற்றுள்ளார். கடனை திருப்பி செலுத்த கூறி யுவராஜுக்கு ஆன்லைன் செயலி மூலம் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சலில் இருந்த யுவராஜ் தனது வீட்டில் சேலையால் மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் குறித்து செங்கல்பட்டு டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# புதுக்கோட்டை விவசாயிகள் சங்கத்துக்கு தேசிய நீர் மேலாண்மை விருது: அமைச்சர் துரைமுருகன் வாழ்த்து

சென்னை, அக். 24

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பரம்பூர் பெரிய கண்மாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கு தேசிய நீர் மேலாண்மை விருது வழங்கப்பட்டது. இதனையொட்டி, இந்த சங்கத்தின் தலைவர், ஆட்சி மன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் இன்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"திருச்சி மண்டலம், தெற்கு வெள்ளாறு உபவடிநிலப் பகுதியில், தமிழ்நாடு விவசாயிகள் பாசன மேலாண்மை சட்டம், 2001கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், பரம்பூர் பெரிய கண்மாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் சிறந்த நீர் மேலாண்மைக்காண ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தால் வழங்கப்படும் தேசிய நீர் விருது 2023ற்கு மூன்றாவதாக தேர்வு செய்யப்பட்டு 22.10.2024 அன்று டெல்லியில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விழாவில் விருது பெற்றனர்.

இவ்விருதினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனிடம் காண்பித்து இச்சங்கத்தின் தலைவர் ப. பொன்னையா, ஆட்சி மன்ற உறுப்பினர் ரா.பழனிசாமி மற்றும் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வே.கனிமொழி ஆகியோர் வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் 1. மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ராமநாதபுரத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி: டெண்டர் கோரியது தமிழக அரசு

சென்னை, அக். 24

ராமநாதபுரம் மாவட்டம் அரியமான் அருகே பிரப்பன்வலசையில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்கப்படும் என சட்டசபையில் துணை முதல் அமைச்சரும், இளைஞர் நலன் விளையாட்டுதுறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கடந்த ஆண்டு அறிவித்தார்.




கடல்சார் நீர் விளையாட்டுகளில் இளைஞர்களின் ஆர்வத்தை ஈர்க்கவும், நீர் விளையாட்டு போட்டிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பை ஏற்படுத்தவும் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாதமி, ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசையில் ரூ. 42 கோடியில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி கட்டுமான பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் டெண்டர் கோரியுள்ளது.

படகு நிறுத்தும் இடம், கட்டுப்பாட்டு மையம், வொர்க் ஷாப், உடற்பயிற்சி கூடம், யோகா மையம், பொருட்கள் வைக்கும் அறை, தங்கும் அறை, உணவுக் கூடம் ஆகியவை இந்த ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமியில் அமைய உள்ளன.

இதில் பாய்மரப்படகு, மரத்தான் நீச்சல் உள்ளிட்ட ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதற்கான டெண்டர் இறுதி செய்யப்பட்டு பணி ஆணை வழங்கிய நாளிலிருந்து, 18 மாதங்களுக்குள் கட்டுமானப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச தரத்தில், அதிநவீன கட்டமைப்புகளுடன் நீர் விளையாட்டு அகாடமி அமைந்தால், தமிழ்நாட்டில் நீர் விளையாட்டு வீரர்கள் அதிகளவில் உருவாவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்தின் காரணமாக, ராமநாதபுரம் மாவட்டம் இந்தியாவையே திரும்பி பார்க்க வைக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நேற்று இரவு கொட்டித் தீர்த்த மழையால் குடியிருப்புகளில் புகுந்தது மழைநீர்: மதுரை செல்லூரில் பொதுமக்கள் அவதி

மதுரை, அக்.24

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு இடங்களில் உள்ள கண்மாய்கள், ஊருணிகள் நிரம்பி வருகின்றன. மதுரை மாவட்டத்தை பொருத்தவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவும், நேற்றும் நள்ளிரவில் பலத்த மழை கொட்டித் தீர்த்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. குறிப்பாக மதுரையில் உள்ள செல்லூர் 50 அடி ரோடு, சுயராஜ்ஜியபுரம் பகுதிகளில், பல்வேறு தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது.



இதனால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று பெய்த மழையால் செல்லூர்பந்தல்குடி கால்வாயில் நேற்று இரவு திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கால்வாய் கரையை மூழ்கடித்து வெள்ளம் சென்றது. இதனால், மாநகராட்சி 24க்குட்பட்ட காமராஜர் தெரு பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் மழைநீர் சூழ்ந்தது.

இதனால், பொதுமக்கள் போக்குவரத்துக்கு அவதிப்படுகின்றனர். இது குறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'பருவமழை பாதிப்புகளை தவிர்க்க போர்க்கால அடிப்படையில் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒரு சில இடங்களில் குடியிருப்புகளில் மழைநீர் புகுந்துள்ளது. பொக்லைன் உள்பட ராட்சத இயந்திரங்கள், கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள் உதவியுடன் தூய்மைப் பணியாளர்கள் 4,000 பேர் தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு விற்பனையை மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்

வேலூர், அக். 24

வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை 14.12.1942 ல் பதிவு செய்யப்பட்டு 27.01.1943 முதல் பணி தொடங்கப்பட்டு 81 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இப்பண்டகசாலையில் 2 சுய சேவை பிரிவுகள், 2 கூட்டுறவு மருந்து விற்பனை பிரிவுகள், 5 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 5 பெட்ரோல் வழங்கு நிலையங்கள், 4 மினி சூப்பர் மார்க்கெட், 147 நியாய விலை கடைகள் ஆகியவை இப்பண்டசாலையின் கீழ் மக்களுக்கு சேவையாற்றி செயல்பட்டு வருகின்றன.

இப்பண்டகசாலையில் தலைமையகத்தில் கூட்டுறவு மருந்து விற்பனை பிரிவுகளில் விற்பனை செய்யப்படும் அனைத்து மருந்துகளுக்கும் 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கி பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறது.



சுயசேவைப் பிரிவுகளில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி அதிகப்படியான சில்லரை விலையை விட குறைவான விலைக்கே மளிகை பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்யப்பட்ட பண்ணை பசுமை காய்கறி கடை செயல்பட்டு வருகிறது. தற்பொழுது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களுக்கு தரமான பட்டாசு பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்யும் நோக்கில் தீபாவளி சிறப்பு விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடியின் மூலம் ரூபாய் 85 லட்சத்திற்கு பட்டாசு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 1 கோடி அளவிற்கு பட்டாசு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு ஆர்டரின் பெயரில் டோர் டெலிவரி வழங்கப்படும். மேலும் கிப்ட் பாக்ஸ்களுக்கு கூடுதலாக 5% விலை குறைப்பு விற்பனை செய்யப்படும். இங்கு குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் வண்ண மத்தாப்புகள், வான வேடிக்கைகள், பல்வேறு வெடி ரகங்கள் தரமான நிறுவனங்களான ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ், போன்ற நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வெளி மார்க்கெட் விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் கூட்டுறவுத் துறையின் சார்பில் விற்பனை செய்யப்படும் இந்த தரமான, விலை குறைவான பட்டாசுகளை பெற்று பாதுகாப்புடனும், காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை, மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை பட்டாசுகளை பாதுகாப்பாக வெடித்து மகிழ்ச்சியுடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடுமாறும், வேலூர் மாவட்ட பொதுமக்கள் அனைவருக்கும் தன்னுடைய தீபாவளி நல்வாழ்த்துக்களை மாவட்ட கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி தெரிவித்தார்.

# நாட்றம்பள்ளி அருகே 3 யூனிட் செயற்கை மணல் பறிமுதல்

நாட்றம்பள்ளி, அக். 24

நாட்றம்பள்ளி அருகே 3 யூனிட் செயற்கை மணலை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த வெலக்கல்நத்தம் ஊராட்சியில் அமைந்துள்ள செட்டேரி டேம் பகுதியை சுற்றிலும் பல ஏக்கர்பரப்பளவில் விவசாய நிலங்கள் உள்ளது. 10 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பெய்த மழைக்காரணமாக செட்டேரி அணை நிரம்பியது. இதனால் விவசாய பணிகள் மீண்டும் களைகட்ட தொடங்கியது.

இந்நிலையில் மணல் மாபியா கும்பல், அங்குள்ள அணை மற்றும் நீர் வரத்து கால்வாய்களில் மணல் அள்ளி விற்று வருகின்றனர். குறிப்பாக டேம் அருகே விவசாய நிலங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள மண் மற்றும் மணலை செயற்கையாக தயாரித்து விற்று வருகின்றனர். இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலின்பேரில் சில வாரங்களுக்கு முன்பு அதிகாரிகள் ஆய்வு செய்து, செயற்கை மணல்தயாரிக்கும் தொட்டிகளை அகற்றினர்.



இந்நிலையில் அரசு அதிகாரிகளுக்கு தெரியாத வகையில் கடந்த வாரம் மீண்டும் செயற்கை மணல் தயாரிக்கும் தொட்டிகளை அமைத்து இரவோடு இரவாக செயற்கை மணல் தயாரித்து விற்பனை செய்வதை தொடங்கியுள்ளனர்.

இதுதொடர்பாக அதிகாரிகளுக்கு மீண்டும் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் நேற்றிரவு நாட்றம்பள்ளி தாசில்தார் ராமகிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி தலைமையிலான போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் சம்பவ இடம் சென்று அங்கு பதுக்கி வைத்திருந்த 3 யூனிட் செயற்கை மணலை பறிமுதல் செய்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மழையால் ஓடைகளில் நீர்வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீவில்லிபுத்தூர், அக். 24

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால், நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், கண்மாய் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே, மேற்குத் தொடர்ச்சி மலையில் செண்பகத்தோப்பு வனப்பகுதி உள்ளது.

புலிகள் காப்பக பகுதியான இந்த வனப்பகுதியில் நேற்று இரவு 8 மணி முதல் இன்று அதிகாலை 2 மணி வரை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், மலையடிவாரப் பகுதிகளில் நீரோடைகளில் மழைநீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



இது குறித்து விவசாயி ஒருவர்கூறுகையில், 'மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்த மழை காரணமாக நீர்வரத்து ஓடைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் மூலம் மம்சாபுரம் பகுதியில் உள்ள வாழைக்குளம் கண்மாய் மற்றும் வேப்பங்குளம் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரும்.

இது பாசன விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்' என தெரிவித்தார்.

# மஹத் நடித்த `காதலே காதலே' படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் ரிலீஸ் தேதி அறிவிப்பு




மங்காத்தா திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதில் இடம் பெற்றவர் நடிகர் மஹத் ராகவேந்திரா . அதைத் தொடர்ந்து ஜில்லா படத்தில் நடித்தார்.

2022 ஆம் ஆண்டு வெளியான டபுள் XL இந்தி திரைப்படத்தில் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்தார்.

தற்பொழுது மஹத் அடுத்ததாக `காதலே காதலே' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தை அறிமுக இயக்குனரான ஆர்.பிரேம்நாத் இயக்கியுள்ளார். இவர் மறைந்த பிரபல இயக்குனரான கே.வி ஆனந்தின் உதவி இயக்குனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தில் மீனாட்சி கதாநாயகியாக நடித்துள்ளார். மஹத்துடன் இணைந்து பாரதிராஜா, விடிவி கணேஷ், ரவீனா, புகழ், நாசர் மற்றும் பலர் நடித்துள்ளனர். `காதலே காதலே' படத்திற்கு விஷால் சந்திரசேகர் இசையமைக்க ஸ்ரீ வாரி பிலிம் நிறுவனம் தயாரித்துள்ளது.

படத்தின் டீசர் சில வாரங்களுக்கு முன் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் படத்தின் முதல் பாடலுக்கான ப்ரோமோ வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

இப்பாடலை வியன் புகழேந்தி வரிகளில் கபில் கபிலன் பாடியுள்ளார். இப்பாடல் வரும் அக்டோபர் 24 ஆம் தேதி மாலை 5 மணிக்கு வெளியாகவுள்ளது.

திரைப்படத்தின் போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. திரைப்படம் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாட்டு நல்லாருக்கும்ல? பன் பட்டர் ஜாம் திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் விரைவில்




அனுஷ்காநடிப்பில் வெளிவந்த "சைஸ் ஸீரோ" தேசிய விருதுபெற்ற "பாரம் " ஆகிய படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதியவர் ராகவ் மிர்தாத்.

அதைத்தொடர்ந்து காலங்களில் அவள் வசந்தம் எனும் படத்தை இயக்கி இயக்குனராக அறிமுகமாகினார்.

அடுத்ததாக இயக்குநர் ராகவ் மிர்தாத் இயக்கியுள்ள பன் பட்டர் ஜாம் திரைப்படத்தில் பிக்பாஸ் சீசன் 5 வின்னரான ராஜு ஜெயமோகன் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

கதாநாயகிகளாக ஆத்யா பிரசாத், பவ்யா ட்ரிக்கா நடித்துள்ளனர். மேலும் சார்லி, சரண்யா பொன்வண்ணன், தேவதர்ஷினி, மைக்கேல் தங்கதுரை, விஜே பப்பு உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

பாபு ஒளிப்பதிவில், ஜான் ஆப்ரகாம் படத்தொகுப்பில் உருவாகிவரும் இப்படத்திற்கு நிவாஸ் கே.பிரசன்னா இசையமைக்கிறார். படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் சில வாரங்களுக்கு முன் வெளியானது.இதை ரெயின் ஆஃப் ஆரோஸ் என்ற தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

படத்தின் ஆடியோ உரிமையை சோனி மியூசிக் நிறுவனம் வாங்கியுள்ளது. படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் விரைவில் வெளியாகும் என படக்குழு ப்ரோமோ வீடியோவை வெளியிட்டு அறிவித்துள்ளது.

இந்த வீடியோ மிகவும் நகைச்சுவை பாணியில் அமைந்துள்ளது. ராஜு , இசையமைப்பாளர் நிவாஸ் கே பிரசன்னாவிடம் பாட்டு நல்லா வந்துரும்ல என கேட்கப்படும் வீடியோவில் அமைந்துள்ளது.

# இயக்குனர் சிவாவை பற்றி அஜித் சொன்ன விஷயம் சூர்யா பகிர்ந்த சுவாரசிய தகவல்



சூர்யா தற்பொழுது சிவா இயக்கத்தில் கங்குவா திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் ரிலீசுக்கு தயாராகவுள்ளது. திரைப்படம் வரும் நவம்பர் 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் படக்குழு தீவிரமாக ஈடுப்பட்டு வருகிறது.

திரைப்படத்தின் இரண்டாம் பாடலான யோலோ பாடல் நேற்று வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தில் சூர்யா இரு கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். திரைப்படத்தில் திஷா பதானி , பாபி தியோல் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

ப்ரோமோஷன் பணிகளில் கலந்துக்கொள்ளும் போது சூர்யா ஒரு சுவாரசிய தகவலை பகிர்ந்தார் அதில் அவர் ' நான் சமீபத்தில் நடிகர் அஜித் சாரை சந்தித்தேன். அப்பொழுது அவர் கூறினார் இப்பொ தெரியுதா நான் ஏன் இயக்குனர் சிவாவ விடலன்னு" என கூறினார். இந்த காணொலி தற்பொழுது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# பாகிஸ்தானுக்கு எதிரான 3வது டெஸ்ட்: இங்கிலாந்து அணி அறிவிப்பு



இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது.

இந்த தொடரில் 2 ஆட்டங்கள் முடிந்துள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. இதனால் டெஸ்ட் தொடர் 11 என சமநிலையில் உள்ளது.

வெற்றியாளர் யார் என்பதை தீர்மானிக்கும் 3வது மற்றும் கடைசி டெஸ்ட் வரும் 24ம் தேதி ராவல்பிண்டியில் தொடங்குகிறது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி தொடரை கைப்பற்றும் என்பதால் இதில் வெற்றிபெற இரு அணிகளும் கடுமையாக போராடும்.

இந்நிலையில், மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான விளையாடும் வீரர்களை (ஆடும் லெவன்) இங்கிலாந்து அறிவித்துள்ளது.

இந்த அணியில் கடந்த போட்டியில் விளையாடாத கஸ் அட்கின்சன் மற்றும் ரெஹான் அகமது ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து அணி விவரம்; ஜாக் க்ராவ்லி, பென் டக்கட், ஆலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜேமி ஸ்மித், கஸ் அட்கின்சன், ரெஹான் அகமது, ஜேக் லீச், ஷோயப் பஷீர்.



# கைல் வெர்ரேய்ன் சதம்: தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 308 ரன்களுக்கு ஆல் அவுட்

வங்கதேசம் தென் ஆப்பிரிக்காஅணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த வங்கதேசம் 106 ரன்னில் ஆல் அவுட் ஆனது.

இதனையடுத்து தென் ஆப்பிரிக்காஅணி முதல் இன்னிங்சை தொடங்கியது. முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 140 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்திருந்தது. கைல் வெர்ரேய்ன் 18 ரன்னிலும் வியான் முல்டர் 17 ரன்னிலும் களத்தில் இருந்தனர்.

இன்று 2வது நாள் தொடங்கியது. இருவரும் பொறுப்புடன் விளையாடி அரை சதம் கடந்தனர். முல்டர் 54 ரன்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். அடுத்து வந்த மகாராஜ் 0 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கைல் வெர்ரேய்ன் 114 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். இதனால் தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 308 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. வங்கதேசம் தரப்பில் தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

# 2026 காமன்வெல்த் போட்டி: கடந்த முறை இந்தியா பதக்கம் வென்ற 6 விளையாட்டுகள் நீக்கம்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 1911ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது.

கடைசியாக காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காமில் 2022ம் ஆண்டு நடைபெற்றது. 2026ம் ஆண்டுக்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் ஜூலை 23ந் தேதி முதல் ஆகஸ்டு 2ந் தேதி வரை நடக்கிறது. 12 ஆண்டுகளுக்கு பிறகு அங்கு இந்தப் போட்டி நடக்கிறது. கடைசியாக 2014ல் நடைபெற்றது. 23வது காமன்வெல்த் விளையாட்டான இதில் இடம் பெறும் போட்டிகள் குறித்து காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு இன்று அறிவித்தது. ஹாக்கி, துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், பேட்மிண்டன், கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகள் நீக்கப்பட்டுள்ளன. கடந்த முறையும் துப்பாக்கி சுடுதல் இடம் பெறவில்லை. தற்போதும் சேர்க்கப்படவில்லை. செலவை கட்டுப்படுத்தும் விதமாக டேபிள் டென்னிஸ், ஸ்குவாஷ், டிரையத்லான் ஆகிய போட்டிகளும் நீக்கப்பட்டுள்ளன. கடந்த முறை இடம் பெற்ற போட்டியில் 7 விளையாட்டுகள் நீக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுகள் நீக்கப்பட்டது இந்தியாவுக்கு மிகப்பெரிய பாதிப்பாகும். ஏனென்றால் இந்த விளையாட்டுகளில் இந்தியாவுக்கு பதக்க வாய்ப்பு இருக்கிறது. கடந்த முறை இந்தியா பதக்கம் வென்ற 6 விளையாட்டுகளும் தற்போது நீக்கப்பட்டு உள்ளன.

காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பின் இந்த முடிவு இந்தியாவுக்கு மிகப்பெரிய பின்னடைவாகும்.

2022 காமன்வெல்த் விளையாட்டில் இந்தியா 22 தங்கம், 16 வெள்ளி, 23 வெண்கலம் ஆக மொத்தம் 61 பதக்கம் பெற்று பதக்கப் பட்டியலில் 4வது இடத்தை பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.